Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

TUESDAY, AUGUST 08, 2023

செவ்வாய்க்கிழமை ஒகஸ்ட் 08, 2023 | ஒளி: 09 கதிர் 057 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# விழுந்து நொறுங்கியது பயிற்சி விமானம்

**விரர்கள் இருவர் பலி**

திருகோணமலை, சீனக்குடா விமானப்படை தளத்தில் பயிற்சி விமானமொன்று விபத்துக்குள்ளானதில் விமானப்படை வீரர்கள் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ தெரிவித்தார்.

சீனக்குடா இலக்கம் 1 விமான பயிற்சி பிரிவுக்கு சொந்தமான PT 6 வகையைச் சேர்ந்த விமானமே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகியுள்ளதாகவும் புறப்பட்டு சிறிது நேரத்தில் விமானம் விபத்துக்குள்ளானதாகவும் விமானப்படைத் தளபதி குறிப்பிட்டார்.

திங்கட்கிழமை (07) காலை 11.25 க்கு பரீட்சைக்காக புறப்பட்ட விமானம், 11.27க்கு விபத்துக்கு உள்ளாகியுள்ளதுடன் குறித்த விபத்தில் எச்.எம்.ரி.கே.ஹேரத் (வயது 25), கே.எம்.பி.எம். வர்ணசூரிய (வயது 40) ஆகிய இரண்டு விமானப்படை வீரர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இதனையடுத்து, இந்த சம்பவம் தொடர்பில் விசேட விசாரணைகளை முன்னெடுப்பதற்காக விசேட குழுவொன்று விமானப்படை தளபதி ஏயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்டுள்ளது.





# பிளாஸ்டிக் தடை 14 நாட்களில் வரும்


அடுத்த இரண்டு வாரங்களுக்குள் சில பிளாஸ்டிக் பொருட்கள் தடைசெய்யப்படும் என்று சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் சில பிளாஸ்டிக் பொருட்கள், பிளாஸ்டிக் மாலைகள், ஒருமுறை பயன்படுத்தும் கரண்டிகள், முள்கரண்டிகள், தயிர்/ஐஸ்கிரீம் கரண்டிகள், பிளாஸ்டிக் ஸ்ட்ரோக்கள், மற்றும் பிளாஸ்டிக் இடியப்பத் தட்டுகள் ஆகியவை தடைசெய்யப்படும் என்றார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ஈரான் ஜனாதிபதியுடன் அமைச்சர் அலிசப்ரி பேச்சு



ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை தெஹ்ரானில் திங்கட்கிழமை (07) சந்தித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கலந்துரையாடலை மேற்கொண்டதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

தொடர்ச்சி P2

# வரட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு நட்டஈடு



வரட்சியான வானிலை காரணமாக பயிர்ச்செய்கை பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நட்டஈட்டை பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி இணங்கியுள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அரசாங்கத்துக்கு எதிராக மீண்டும் போராட்டம்

# இரகசிய அறிக்கை கையளிப்பு



வரட்சி காரணமாக விவசாயிகள் மத்தியில் நிலவும் கொந்தளிப்பை சாதகமாக பயன்படுத்தி, அவர்களை அரசாங்கத்துக்கு எதிராக வீதிக்கு இறக்கி மீண்டும் ஒரு போராட்டத்தை உருவாக்க திட்டம் தீட்டப்படுவதாக, அரச புலனாய்வுப் பிரிவினரால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இரகசிய அறிக்கையொன்று கையளிக்கப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

போராட்டத்தை உருவாக்கும் சதியின் பின்னணியில் முந்தைய போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு குழுவினர் இருப்பதாகவும் எதிர்க்கட்சி மற்றும் எதிரணியில் தமிழ் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவருக்கும் தொடர்பு இருப்பதாகவும் புலனாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

நாட்டின் பொருளாதார வேலைத்திட்டத்தை சீர்குலைப்பதே இதன் பின்னணியில் உள்ள சக்திகளின் முக்கிய நோக்கம் என்பதை புலனாய்வு பிரிவு சுட்டிக்காட்டியுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

தொடர்ச்சி P2




# வேலன் சுவாமிகள் உள்ளிட்ட ஐவருக்கு சொந்தப் பிணை

கிளிநொச்சியில் இடம்பெற்ற போராட்டத்தில் கலந்து கொண்டமை குறித்து தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் வேலன் சுவாமிகள் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும், தமிழ் தேசிய கட்சியின் பொது செயலாளருமான சிவாஜிலிங்கம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் தலைவி, பல்கலைக்கழக மாணவர் ஒன்றிய தலைவர் மற்றும் கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் ஆகியோரை சொந்தப் பிணையில் செல்லுமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றம், திங்கட்கிழமை (07) உத்தரவிட்டது.

தொடர்ச்சி P2



# ரூபாய் சரிந்தது; தங்கம் உயர்ந்தது

கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியடைந்துள்ளதுடன், தங்கத்தின் விலையும் சற்று அதிகரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் திங்கட்கிழமை (07) வெளியிடப்பட்ட நாணய மாற்று விகிதங்களுக்கு அமைய அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 315 ரூபாய் 05 சதமாகவும் விற்பனை விலை 328 ரூபாய் 57 சதமாகவும் அதிகரித்துள்ளது.

தொடர்ச்சி P2

# சபாநாயகரைச் சந்தித்தார் புதிய கொரிய தூதுவர்



கொரிய குடியரசின் இலங்கைக்கான புதிய தூதுவர் மியோன் லீ, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவை பாராளுமன்றத்தில் அண்மையில் சந்தித்தார்.

பரஸ்பர நலன்கள் தொடர்பில் கவனம் செலுத்தி அவர்களுக்கிடையில் இடம்பெற்ற சிநேகபூர்வ கலந்துரையாடலில், இலங்கையின் விவசாயத்துறையுடன் தொடர்புபட்ட ஆய்வு மற்றும் அபிவிருத்திகளுக்கு ஆதரவளிப்பது பற்றிய தூதுவர் வலியுறுத்தினார்.

தொடர்ச்சி P2

# மின்கட்டணம் திருத்தப்படாது; தடையில்லா மின் விநியோகம்



மின் கட்டண உயர்வு தொடர்பான ஊடகச் செய்திகளை மறுத்துள்ள மின்சக்தி மற்றும் வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, மின்சார கட்டணத்தில் திருத்தம் செய்யப்பட மாட்டாது என்றும் ஆண்டு முழுவதும் தடையற்ற மின்சார விநியோகத்தை திட்டமிடப்பட்ட மின் வெட்டுக்கள் இன்றி வழங்குவதற்கு இலங்கை மின்சார சபை திட்டமிட்டுள்ளதாகவும் உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2

# “திட்டம் இல்லாத குழப்பவாதி சஜித்”

## கல்முனையில் ரங்கே பண்டார தெரிவிப்பு

ஏ.எஸ்.மௌலானா



“சஜித் ஒரு குழப்பவாதி. கட்சிக்குள் குழப்பங்களை ஏற்படுத்தி, நாட்டை முன்னேற்றும் வல்லமை மிக்க ஐக்கிய தேசியக் கட்சியை உடைத்ததே அவர் புரிந்த சாதனையாகும். நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான எவ்வித திட்டமும் சஜித் பிரேமதாசவிடம் கிடையாது” என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான பாலித ரங்கே பண்டார தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# கட்டணம் வசூலித்தால் நடவடிக்கை எடுப்போம்

பு.கஜிந்தன்



வட மாகாணத்தில் முன்னணி பாடசாலைகளில் மின்சார கட்டணம் மற்றும் ஏனைய பாடசாலை செலவுகளுக்காக பாடசாலை மாணவர்களிடமிருந்து பணம் அறவிட முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## தேவையான நீரை விடுவிக்க தவறியமை

# ஆணைக்குழுவில் முறையிட தீர்மானம்

மகாவலி வலயங்களில் உள்ள விவசாயிகளுக்குத் தேவையான நீரை அதிகாரிகள் விடுவிக்கத் தவறியமை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்து ஆணைக்குழுவின் தலையீட்டைக் கோரவுள்ளதாக அகில இலங்கை விவசாயிகள் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

நீர்த்தேக்கங்களில் போதியளவு நீர் உள்ள போதிலும் பயிர்ச்செய்கைக்குத் தேவையான நீர் விடுவிக்கப்படுவதில்லை என சம்மேளனம் குறிப்பிட்டது.




தொடர்ச்சி P2

# பச்சை தேயிலை விலை வீழ்ச்சி



பச்சை தேயிலை விலை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளதால் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த காலங்களில் 350 முதல் 400 ரூபாவாக உயர்ந்திருந்த ஒரு கிலோ கிராம் பச்சை தேயிலையின் விலை தற்போது 160 முதல் 165 ரூபாவாக குறைந்துள்ளதாக தேயிலை தோட்ட உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

மலையகத்தில் ஒரு கிலோ கிராம் தேயிலையின் விலை கீழ்நாட்டில் 160-165 ரூபாவாகவும், மலையகத்தில் ஒரு கிலோ கிராம் பச்சை தேயிலையின் விலை 160-165 ரூபாவாகவும் காணப்படுவதாக சிறு தேயிலை தோட்ட உரிமையாளர்களின் தேசிய சம்மேளனத்தின் தேசிய அமைப்பாளர் லால் பிரேமநாத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்


## வரட்சியால் பாதித்த விவசாயிகளுக்கு...



பயிர்ச்செய்கை பாதிப்பு தொடர்பான மதிப்பீடுகளை ஆரம்பிக்குமாறு விவசாயம் மற்றும் விவசாயிகள் காப்புறுதி சபைக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

அத்துடன், எம்பிலிபிட்டிய விவசாயிகளுக்கு வெலிஓயா நீர்த்தேக்கத்தில் இருந்து தற்போது குறிப்பிட்டளவு நீர் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் இதன்மூலம் 15 - 20 வீதமான செய்கைகளை பாதுகாக்க முடியுமென அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

வரட்சி காரணமாக 4 மாகாணங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது நிலையில், எதிர்வரும் ஒக்டோபர் மாதம் வரை நாட்டுக்கு போதியளவு மழைவீழ்ச்சி கிடைப்பதற்கான சாத்தியமில்லை என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.



## ரூபாய் சரிந்தது...

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை மத்திய வங்கி இறுதியாக வெளியிட்ட நாணய மாற்று விகிதத்துக்கு அமைய, அமெரிக்க டொலரொன்றின் கொள்வனவு விலை 312 ரூபாய் 55 சதமாகவும், விற்பனை விலை 326 ரூபாய் 65 சதமாகவும் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த வெள்ளிக்கிழமையுடன் (04) ஒப்பிடுகையில் உள்ளூர் தங்க சந்தையில் தங்கத்தின் விலை திங்கட்கிழமை (03) சற்று உயர்ந்துள்ளதாக உள்ளூர் தங்க வியாபாரிகள் தெரிவித்தனர்.

ஒரு பவுண் 22 கரட் தங்கம் 160 ஆயிரத்து 250 ரூபாயாகவும் ஒரு பவுண் 24 கரட் தங்கம் 174 ஆயிரம் ரூபாயாகவும் அதிகரித்துள்ளது.

## அரசாங்கத்துக்கு எதிராக மீண்டும் போராட்டம்

# இரகசிய அறிக்கை...

இந்த சதியின் பின்னணியில் உள்ள குழுக்கள் யார் என்பதை புலனாய்வு அமைப்புகள் விரிவாக சுட்டிக்காட்டியுள்ளதாகவும் பல ஊடக நிறுவனங்களின் பெயரையும் குறிப்பிட்டுள்ளதாகவும் அந்த ஊடக நிறுவனங்கள் மக்களைத் தூண்டும் வகையில் செய்தி வெளியிடுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வரட்சியினால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு அரசாங்கம் தண்ணீர் வழங்குவதில்லை எனவும் இதனால் உணவுத் தட்டுப்பாடு ஏற்படும் எனவும் குறிப்பிட்டு, தண்ணீருக்காக மக்களை வீதிக்கு இறக்கும் பணியில் இந்தக் குழு ஈடுபட்டுள்ளதாக புலனாய்வு அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது

கடந்த வருடத்தைப் போன்று மீண்டும் வரிசை யுகத்தை கொண்டு வந்து அதன் மூலம் அரசியல் ரீதியில் அதிர்வலைகளை ஏற்படுத்துவதே இந்த குழு விரும்புவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## மின்கட்டணம் திருத்தப்படாது;...

இது குறித்து திங்கட்கிழமை (07) வெளியிட்ட தனது டுவிட்டர் பதிவில் அவர் மேலும் தெரிவித்திருந்தாவது,

ஒவ்வொரு வருடமும் ஜனவரி மற்றும் ஜூலை மாதங்களில் இரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மின்சார கட்டணத்தை மாற்றியமைப்பது அரசாங்கத்தின் கொள்கை தீர்மானம் என்று குறிப்பிட்டார்.

ஆண்டு முழுவதும் தடையற்ற வழங்கல் திட்டமிட்டுள்ளதாகவும் தற்போது கிடைக்கக்கூடிய மின் உற்பத்தி நிலையங்களின் முழு கொள்ளளவும் மின் உற்பத்திக்காக பயன்படுத்தப்படுவதாகவும் குறிப்பிட்டார்.

இலங்கை மின்சார சபை மற்றும் நீர்ப்பாசன திணைக்கள அதிகாரிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற சந்திப்பின் விபரங்களையும் அமைச்சர் குறிப்பிட்டார்.

திட்டமிடப்பட்ட மின்வெட்டுகள் இன்றி தொடர்ச்சியான மின்சார விநியோகத்தை உறுதிப்படுத்துதல் மற்றும் விவசாயத்துக்கு திறந்து விடக்கூடிய அதிகபட்ச நீரை வழங்குவது தொடர்பான தெரிவுகள் அமைச்சரவையில் கலந்துரையாடப்படும் என்றார்.

அடுத்த 12 மாதங்களுக்கான மின் உற்பத்தி, விவசாயத்துக்கான நீர் விநியோகம், நீர்மின் திறன், அனல் மின்சாரம் உள்ளிட்டவை தொடர்பான விவரங்கள் பகிரப்பட்டு விவாதிக்கப்படும் என தெரிவித்தார்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன் பொல்பிட்டிய-ஹம்பாந்தோட்டை மின் செலுத்தும் கட்டமைப்பை நிறைவு செய்வதற்கு காணி உரிமையாளருக்கும் மின்சார சபைக்கும் இடையிலான பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கான கலந்துரையாடலை ஒகஸ்ட் 11 ஆம் திகதி நடத்துவதற்கு இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

தென் மாகாணத்தை இணைக்கும் 150 கிலோமீற்றர் மின் பாதையானது கடந்த 3 மாதங்களாக இணைக்கப்பட்டுள்ள 650 மீற்றர் காணிக்கான அரசாங்க மதிப்பீட்டில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

பிரச்னைக்கு தீர்வு கிடைத்தால், 4 நாட்களில் பணியை முடிக்க முடியும் என்றும் ஏற்கனவே 2,500 பேருக்கு அரசாங்க மதிப்பீட்டின் பேரில் மின்சாரசபை இழப்பீடு வழங்கியுள்ளது என்றும் 10 கிலோ மீற்றருக்கான வேலைகளே எஞ்சியுள்ளது என்றார்.

## பிளாஸ்டிக் தடை...

எதிர்வரும் 2023 ஐ.நா காலநிலை மாற்றம் தொடர்பான மாநாட்டின் 28 ஆவது கூட்டத்தில், பாதிக்கப்படக்கூடிய மற்றும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளுக்கான காலநிலை நியாய மன்றத்தை இலங்கை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

காலநிலை நிதியை உறுதிப்படுத்துதல், இழப்புகள் மற்றும் சேதங்களுக்கு நிதியளிப்பதை துரிதப்படுத்துவதற்கு பாரம்பரியமற்ற மாற்று அணுகுமுறையை பேணும் பொதுவான நோக்கத்துடன், காலநிலை நியாய மன்றம் ஒன்றை நிறுவுவதற்கு இலங்கை முன்மொழிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஏற்படும் சுற்றுச்சூழல் பிரச்சினைகளைகளுக்கு முன்னுரிமை அளித்து கலந்துரையாட அரசாங்கங்கள், அரசாங்கங்களுக்கி டையேயான நிறுவனங்கள் மற்றும் பிற தரப்பினர்களுக்கு தளத்தை வழங்கும் ஆசிய பசுபிக் அமைச்சர்கள் மற்றும் சுற்றுச்சூழல் அதிகாரிகளின் ஐந்தாவது மன்றத்தை 2023 ஒக்டோபர் 03 முதல் 06 வரை கொழும்பில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் ஐக்கிய நாடுகளின் சுற்றுச்சூழல் வேலைத்திட்டத்துடன் இணைந்து சுற்றாடல் அமைச்சு, இதனை ஏற்பாடு செய்வதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும், தம்புள்ளை மற்றும் ஹிரிவடுன்ன ஆகியவற்றை சுற்றுச்சூழல் சுற்றுலாத் தலங்களாக அபிவிருத்தி செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாகவும் தெரிவித்தார்.

மத்திய சுற்றாடல் அதிகார சபை ஆனது நாட்டின் காற்றின் தரப் பாதுகாப்பு நிலையை அறிக்கை அளிப்பதற்கான அவசரகால பதில் செயல் திட்டம் ஒன்றை ஏற்கனவே தயாரித்துள்ளதாகவும் மேலும், சுற்றாடல் அமைச்சு, மின்சாரம் மற்றும் இலத்திரனியல் கழிவு முகாமைத்துவம் தொடர்பான தேசிய கொள்கையை தயாரித்து வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

கழிவு முகாமைத்துவத்தின் கீழ் பிளாஸ்டிக் பயன்பாடு மற்றும் மீள்சுழற்சிக்கும் புதிய விதிகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். மத்திய சுற்றாடல் அதிகார சபை ஏற்கனவே விரிவாக்கப்பட்ட உற்பத்தியாளர் பொறுப்பு விதிகளை இதில் இணைத்துள்ளது என்றும் அமைச்சர் இதன்போது தெரிவித்தார்.

## ஈரான் ஜனாதிபதியுடன்...

இக் கலந்துரையாடலின் போது இலங்கையின் ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவின் வாழ்த்துக்களை வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துக்கொண்டார்.

பரஸ்பர நன்மை பயக்கும் பொருளாதார முன்னேற்றம் குறித்தும் இரு நாடுகளுக்கும் இடையேயான நீண்டகால இருதரப்பு உறவுகள், பலதரப்பு ஒத்துழைப்பு மற்றும் நட்பு குறித்தும் கருத்துக்களை பரிமாறிக் கொண்டனர்.

கடந்த 4ஆம் திகதியன்று ஈரானுக்கு பயணமான அமைச்சர் அலி சப்ரி, ஈரானிய வெளிவிவகார அமைச்சர் டாக்டர் ஹொசைன் அமீர் அப்துல்லாஹியன் மற்றும் அரசாங்கத்தின் சிரேஷ்ட அதிகாரிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டிருந்தார்.

ஈரானிய வெளிவிவகார அமைச்சரின் அழைப்பில் மேற்கொள்ளப்பட்ட இந்த உத்தியோகபூர்வ விஜயத்தின் இறுதிநாளான திங்கட்கிழமை (07) ஈரான் இஸ்லாமிய குடியரசின் ஜனாதிபதி இப்ராஹிம் ரைசியை அமைச்சர் சந்தித்திருந்தார்.

## வேலன் சுவாமிகள்...

கிளிநொச்சியில் கடந்த பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி நடைபெற்ற போராட்டத்தில் பங்கு பற்றியமைக்கு எதிராக மேற்குறிப்பிட்டோருக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸார் தாக்கல் செய்த வழக்கு தொடர்பில் கிளிநொச்சி நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கையின் சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதியை சுதந்திர மறுப்பு தினமாக வடக்கு, கிழக்கில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு எதிராக கிளிநொச்சி பொலிஸாரால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

வழக்கில் பெயரிடப்பட்டிருந்தோரை திங்கட்கிழமை (07) முன்னிலையாகுமாறு உத்தரவிடப் பட்டிருந்தமைக்கு அமைய அனைவரும் ஆஜராகியிருந்தனர்.

கிளிநொச்சி நீதிமன்றத்தில் பணியுரிகின்ற அனைத்து சட்டத்தரணிகளும் ஒரு முகமாக எழுந்து வழக்கினை எதிர்கொண்டு நியாயத்தை சுட்டிக்காட்டியதையடுத்து குறித்த நபர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

## ஆணைக்குழுவில் முறையிட...

இந்த நடவடிக்கைக்கு எதிராக மகாவலி வலயங்களில் உள்ள விவசாயிகள் பல நாட்களாக போராட்டம் நடத்தி வருகின்றனர்.

கடந்த 20 வருடங்களில் மகாவலி வலயங்களில் ஏற்பட்டுள்ள மோசமான வரட்சியினால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, கொத்மலை நீர்த்தேக்கத்தில் இருந்து 2 ஆயிரம் ஏக்கர் அடி நீரை மகாவலி பகுதிகளுக்கு விடுவிக்க இலங்கை மகாவலி அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

தற்போது நீர் பற்றாக்குறையை எதிர்நோக்கும் கலா வாவி, நாச்சதுவ மற்றும் தம்புலு ஓயா ஆகிய பகுதிகளுக்கு நீர் திறந்து விடப்படவுள்ளதாக இலங்கை மகாவலி அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

பொல்கொல்லயிலிருந்து போவதென்ன வரை சுரங்கப்பாதை ஊடாக நீர் கொண்டு செல்லப்படும் எனவும் அதற்கமைய, சிறுபோகத்திற்காக விடுவிக்கப்படும் நீரை சிக்கனமாகப் பயன்படுத்துமாறு விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

## திட்டம் இல்லாத...

அரகலய போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கல்முனையில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், "தனது தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலுக்காக

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் செயற்பாடுகளிலேயே அதிகம் ஈடுபடுவார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எப்போதும் ஒற்றுமைக்காக பாடுபடுகின்ற ஒரு தலைவராக திகழ்கிறார். ஏனென்றால் அவருக்கு தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல் கிடையாது. இன்று பல தரப்பினையும் ஒன்றிணைத்து நாட்டை முன்னோக்கி கொண்டு செல்கிறார்.

அதனால்தான் அதல பாதாளத்தில் வீழ்ந்திருக்கின்ற பொருளாதாரத்தை மீட்டெடுத்து, நாட்டை கட்டியெழுப்புகின்ற திட்டங்களுடன் முழுமூச்சாக செயற்படுகின்ற ஜனாதிபதி ரணிலுடன் இன்று உலக நாடுகளின் தலைவர்கள் கைகோர்த்துள்ளனர்.

ஒரு வருடத்துக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை மீட்டிப்பாருங்கள். மக்கள் நடுத்தெருக்களில் வரிசைகளில் அல்லல்பட்டனர். சிலர் தெருக்களிலேயே மரணித்தனர். மக்கள் நிம்மதியிழந்து, துன்பப்பட்டனர். உரிய தருணத்தில் ஜனாதிபதி ரணில் துணிச்சலுடன் முன்வந்து, நாட்டை பொறுப்பேற்றிருக்கா விட்டால் என்ன நடந்திருக்கும். நிலைமை இன்னும் படுமோசமான நிலைக்கு சென்றிருக்கும்.

எமது தேசமும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்ட ஒரே தலைவராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திகழ்கிறார். அவர் ஜனாதிபதியாக நீடிக்க வேண்டும். இன்றைய சூழ்நிலையில் பாராளுமன்ற தேர்தலோ மாகாண சபைத் தேர்தலோ உள்ளூராட்சி தேர்தலோ அவசியமில்லை. இவற்றால் பொருளாதாரத்தை முன்னேற்ற முடியாது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் மாத்திரமே பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும். அதனை அவர் வெற்றிகரமாக முன்கொண்டு செல்கிறார். ஆகையினால் ஜனாதிபதித் தேர்தல் ஒன்று நடத்தப்பட்டு அவரது இருப்பு உறுதி செய்யப்பட வேண்டும்.

அரகலய போராட்டக்காரர்கள் வேண்டி நிற்கின்ற System Change - முறைமை மாற்றம் தொடர்பிலான முன்மொழிவுகள், கோரிக்கைகள் ஐக்கிய தேசிய கட்சியின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்படும்" என்றார்.

## சபாநாயகரைச் சந்தித்தார்ப்...

அத்துடன், KOICA மூலம் வழங்கப்படும் ஆதரவுகள், கல்விக்கான ஆதரவுகள், போக்குவரத்து, நீர் முகாமைத்துவம் மற்றும் சுகாதாரம் போன்ற கிராமப்புற அபிவிருத்தி என்பன தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பாராளுமன்ற பதில் செயலாளர் நாயகம் ஹன்ஸ அபேரத்னவும் இதன்போது கலந்துகொண்டார்.



© Parliament of

## பச்சை தேயிலை...

100-110 ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளதால் தோட்ட உரிமையாளர்கள் கடும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளனர்.

தேயிலையின் நிலை மோசமடைந்ததன் காரணமாக நாட்டில் தேயிலையின் விலை ஏலத்தில் வீழ்ச்சியடைந்துள்ளமையே விலை வீழ்ச்சிக்கு முக்கிய காரணம் என அவர் தெரிவித்துள்ளார். மேலும், ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்பு உயர்வு மற்றும் வீழ்ச்சியும் விலை ஏற்றத்தை பாதித்துள்ளது என்றார்.

தேயிலையின் நிலையைக் குறைக்க சேதன உரங்கள் என்ற கருத்தாக்கம் அறிமுகப்படுத்தப்பட்ட நிலையில், தேயிலைக்கு உரிய உரம் கிடைக்காமை, உரத்தின் விலை அதிகரிப்பு, போதிய அளவு இல்லாமை



போன்ற காரணங்களினால் தேயிலை மரத்தின் வளர்ச்சி குறைவடைந்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

மலேசியாவில் இருந்து தரம் குறைந்த தேயிலையை கடத்தி இலங்கைத் தேயிலையாக மீள் ஏற்றுமதி செய்வதால் இலங்கை தேயிலையின் தரம் தொடர்பில் உலக தேயிலை சந்தையில் பிரச்சினை ஏற்பட்டுள்ளதாகவும்லால் பிரேமநாத் குறிப்பிட்டுள்ளார்.

## கட்டணம் வசூலித்தால்...

யாழ்ப்பாணத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஊடகவியலாளர் அழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு பதிலளித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "வடக்கில் உள்ள பிரபல பாடசாலைகள் சில பாடசாலை மின்சார கட்டணம் மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை ஈடு செய்வதற்காக மாணவர்களிடம் பணம் அறவிடப்படுவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தினால் மாணவர்களுக்கு இலவச கல்வி வழங்கப்படும் நிலையில் பாடசாலைகள் மாணவர்களிடம் பணம் அறவிட முடியாது.

தற்போது அரசாங்கம் பாடசாலைக்கு வழங்கும் குடிநீர் தண்ணீர் கான கோட்டாவை மட்டுப்படுத்தவுள்ள நிலையில் மாணவர்களுக்கான சுத்தமான குடிநீரை பெறுவதில் சிக்கல் ஏற்படும்.

இந்நிலையில் பாடசாலைகள் மாணவர்களிடம் நிதியை பெறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ளும் நிலையில் பெற்றோர்கள் நிதி வழங்க வேண்டாம்.

மின்சார கட்டணத்தை உயர்த்திய அரசாங்கம் பாடசாலைகளுக்கான மின்சார கொடுப்பனவுகளையும் அதிகரித்தே ஆக வேண்டும்.

எனவே பாடசாலைகள் மாணவர்களிடம் பணம் கேட்டால் பெற்றோர்கள் வழங்க வேண்டிய தேவை இல்லை. அவ்வாறு நிர்பந்திக்கப்பட்டால் எமக்கு தகவல் தாருங்கள் நடவடிக்கை எடுப்போம்.

இலங்கை அரசாங்கம் கல்வி சீர்திருத்தத்துக்காக 5 ஆயிரம் மில்லியன் ரூபாய்களை ஒதுக்கிய நிலையில் குறித்த நிதி முழுமையாகப் பயன்படுத்தப்பட்டதா என்ற கேள்வி எழுகிறது.

வட மாகாணம் உட்பட இலங்கையில் 3ஆயிரம் பாடசாலைகள் மூடப்பட்டுள்ள நிலையில் ஆசிரியர்கள் பலர் சம்பளமற்ற விடுமுறையை எடுத்துக் கொண்டு வெளிநாடுகளுக்கு சென்று கொண்டிருக்கிறார்கள்.

நாட்டில் விலைவாசி அதிகரித்துள்ள நிலையில் ஆசிரியருக்கான சம்பளத்தை அதிகரிக்க பல தடவை கோரிக்கை விடுத்தும் அரசாங்கம் கவனத்தில் கொள்ளவில்லை" என்றார்.

# “பொறுப்புணர்வுடன் முன்வர வேண்டும்”

■ சுப்ரமணியம் பாஸ்கரன்

எது சுற்றாடலை பேணுவதற்கு அனைவரும் பொறுப்புணர்வுடன் முன்வர வேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

சுற்றாடல் அமைச்சின் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் இலத்திரணியல் கழிவுகளை முறையாக சேகரிக்கும் ஒரு வார கால நிகழ்ச்சி திட்டம் கிளிநொச்சி யில் திங்கட்கிழமை (07) ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் தொடர்ந்து குறிப்பிடுகையில் பொதுவாக எங்கள் மத்தியிலே ஒழுக்கம் உருவாக வேண்டும், அதாவது என்ன கழிவாக இருந்தாலும் அதனை முறைப்படி அகற்றும் செயல்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் அதனை விடுத்து பொறுப்பற்ற விதத்திலே பொது இடங்களில் கழிவுகளை போடுவதனால் சுற்றாடல் பாதிப்படைகின்றது

அதிலும் இந்த இலத்திரணியல் கழிவுகள் என்பது மிக மிக ஆபத்தானவை. இந்த இல்லத்திரனியல் பொருட்களின் பாவனை என்பது வடமாகணத்தில் அதிகளவில காணப்படுகிறது சாதாரணமாக நாங்கள் பாவிக்கின்ற கைத்தொலைபேசி கூட ஒருவருக்கு இரண்டு கைத்தொலைபேசிகள் அல்லது அதற்கு மேலும் காணப்படுகின்றன.



இந்த இலத்திரனியல் கழிவுகளை சேகரிக்கின்ற செயற்பாடானது அனைத்து இடங்களிலும் விரிவு படுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்த அவர் எங்களது சுற்றாடலை பேணுவதற்கு அனைவரும் பொறுப்புடன் முன்வர வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சீன பெண்ணை தடியால் தாக்கிய இருவர் கைது

■ ரஞ்சித் ராஜபக்ஷ



உடரட்ட மெனிக்கே ரயிலில் பயணித்த சீனப் பெண்ணை தாக்கிவிட்டு, அவரிடமிருந்த அலைபேசியை அபகரிக்க முயன்ற குற்றச்சாட்டில் இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மற்றுமொரு சந்தேகநபரை தேடும் நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

கொழும்பு கோட்டையிலிருந்து பதுளை நோக்கி ஓடும் உடரட்ட மெனிகே ரயிலில் இருந்து அலைபேசியூடாக ஞாயிற்றுக்கிழமை (06) வீடியோ எடுத்துக்கொண்டிருந்த சீனப் பெண்ணை தடியால் தாக்கிய இரு சந்தேக நபர்களை நாவலப்பிட்டி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

லியு குயின் என்ற சீனப் பெண், தனது கணவர் மற்றும் மகளுடன் இலங்கைக்கு விஜயம் செய்து, சுற்றுலா வழிகாட்டி ஒருவருடன் எல்ல ரயில் நிலையத்திற்கு (06) பயணித்த போது, ஜன்னலுக்கு வெளியே தனது கைத்தொலைபேசியில் அழகிய இடங்களை வீடியோ எடுத்துக்கொண்டிருந்தார்.

நாவலப்பிட்டி, இகுருஓயா நிலையத்தை ரயில் அண்மித்த போது ரயில் தண்டவாளத்துக்கு அருகில் நின்றிருந்த மூன்று இளைஞர்களில் ஒருவர், வீடியோ படம் பிடித்துக்கொண்டிருந்த பெண்ணை நீண்ட தடியால் தாக்கியுள்ளார்.

அந்த இளைஞர்கள் அவளை அடிக்கும் காட்சிகள் அவரது அலைபேசியில் பதிவாகியுள்ளது, மேலும் அடித்ததில் அப்பெண்ணின் கையில் காயம் ஏற்பட்டது.

பின்னர், சம்பவம் தொடர்பில் சுற்றுலா வழிகாட்டிக்கு தெரியப்படுத்தியதையடுத்து, சீன மொழியில் தனது முறைப்பாட்டை பதிவு செய்து, அதனை சிங்கள மொழியில் மொழிமாற்றம் செய்து, கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்த முறைப்பாட்டையும், பதிவு செய்யப்பட்ட காட்சிகளையும் நாவலப்பிட்டி பொலிஸாருக்கு WhatsApp ஊடாக அனுப்பி வைத்துள்ளார்.

நாவலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஹரேந்திர களுகம்பிட்டிய, பொலிஸ் உத்தியோகத்தர்கள் நாவலப்பிட்டி இகுரு ஓயா புகையிரத நிலையத்திற்குச் சென்று சந்தேகத்தின் பேரில் இருவரைக் கைது செய்ய முடிந்தது.

மற்றுமொரு சந்தேக நபரை கைது செய்வதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளதாக நாவலப்பிட்டி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் நாவலப்பிட்டி இகுருஓயா பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும், அவர்கள் 22-24 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், சந்தேகநபர்கள் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையானவர்கள் எனவும் அறியமுடிகின்றது.

சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதையடுத்து, சந்தேகநபர்களை கைது செய்வது தொடர்பாக வாட்ஸ்அப் தொழில்நுட்பம் மூலம் சீன பெண் பொலிஸாருக்கு தகவல் அனுப்பியுள்ளார்.



## கலைஞர்கள் சந்திப்பு

■ மெய்யன்

மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் கலைஞர்கள் சந்திப்பு புஸ்ஸல்லாவை இந்து தேசிய கல்லூரியில் தலைவர் மலையக வாசுதேவன் தலைமையில் ஞாயிறன்று (6) இடம் பெற்றது.

இதன்போது பேரவையின் இவ்வாண்டுக்கான நிகழ்ச்சித் திட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டது. நடப்பாண்டுக்கான நிர்வாகக் குழுத் தெரிவும் இடம்பெற்றது.

மலையக நட்சத்திரக் கலைப் பேரவையின் தலைவராக மலையக வாசுதேவனும் செயலாளராக ஆறுமுகம் சந்திரமோகனும் பொருளாளராக முப்புளி மகேஸ்வரனும் தெரிவுசெய்யப்பட்டனர்.

உப-தலைவராக சந்தனம் சத்தியநாதன் உப -செயலாளராக மாரிமுத்து யோகேஸ்வரன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர்.

## அதிர்ஷ்டம் கிடைத்தவரை அப்படியே தூக்கினர்

அதிர்ஷ்ட இலாபச் சீட்டில் ஏழரை கோடி ரூபாயை வென்ற வர்த்தகர் ஒருவர் கடத்தப்பட்டுள்ளார்.

அவ்வாறு கடத்தப்பட்ட அக்குறனை பிரதேசத்தைச் சேர்ந்த நபரை, 10 நாட்கள் தடுத்து வைத்து தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கம்பளை பிரதேசத்தில் உள்ள இரண்டு வீடுகளில் மாறி, மாறி தடுத்து வைத்தே இவ்வாறு தாக்குதல் நடத்தியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தகவல் கிடைத்ததும்



விரைந்து செயற்பட்ட கம்பளை விசேட அதிரடிப் படையினர், அவ்விரு வீடுகளையும் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தி அந்த நபரை மீட்டுள்ளனர்.

அத்துடன் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என்றக் குற்றச்சாட்டின் பேரில், நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடத்தப்பட்டு, அடைத்து வைக்கப்பட்டிருந்த கண்டி, அக்குறனை பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட மொஹமட் ஹாசிம் என்பவரே மீட்கப்பட்டுள்ளார்.

அவரை சிறைப்பிடித்து வைத்திருந்ததாகக் கூறப்படும் மர ஆலை உரிமையாளரும் கைது செய்யப்பட்டவர்களில் அடங்குகிறார்.

## நானுஓயாவில் கத்திக்குத்து சகோதரர்கள் சரண்

■ டி.சந்ரு செ.தீவாகரன்

நானுஓயா பிரதான நகரில் திங்கட்கிழமை (07) காலை இடம்பெற்ற வாக்குவாதத்தை அடுத்து இடம்பெற்ற கத்தி குத்து சம்பவத்தில் வர்த்தகர் காயமடைந்தார்.

இதில் படுகாயமடைந்த வர்த்தகர் நுவரெலியா மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வர்த்தக நிலைய வாடகை மற்றும் பணம் கொடுக்கல் வாங்கல் காரணமாக ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதலால் இந்த மோதல் இடம்பெற்றதாக ஆரம்பக் கட்ட விசாரணைகளில் தெரிவிக்கப்படுகின்றது

கத்தியால் குத்தியவர்கள் சகோதரர்கள் எனவும் , இவர்கள் இருவரும் தானாகவே நானுஓயா நிலையத்தில்



சரணடைந்ததாக சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவரும் நானுஓயா பொலிஸார் தெரிவித்தனர்.

## வாள்களுடன் இளைஞர் கைது

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் கோண்டாவில் பகுதியில் இரண்டு வாள்களுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்

பொலிஸ் விசேட அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் , கோண்டாவில் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள வீடொன்றில் ஞாயிற்றுக்கிழமை ( 06 ) முன்னெடுக்கப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது , இரண்டு வாள்கள் மீட்கப்பட்டன.

அதனை அடுத்து வீட்டில் வசிக்கும் இளைஞனை கைது செய்து , வாளுடன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முற்படுத்திய நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## திருமண விளம்பரத்தில் ஏமாற்றிய பெண் கைது

திருமண விளம்பரம் மூலம் சந்தித்த 67 வயதுடைய நபரை அச்சுறுத்தி மிரட்டி 69 இலட்சம் ரூபாவை வங்கிக் கணக்கில் வைப்பிலிட்ட 57 வயதுடைய பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக நிட்டம்புவ தலைமையக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். காவல்.

சந்தேகத்திற்கிடமான பெண்ணின் மார்பகத்தில் உள்ள நரம்பு வெடித்துள்ளதால், அதனை அறுவை சிகிச்சை மூலம் புனரமைக்க முடியும் என்பதற்காக இந்த பணத்தை எடுத்துச் சென்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இதற்கு உறுதுணையாக இருந்ததாகக் கூறப்படும் 26 மற்றும் 32 வயதுடைய இருவர் சந்தேகத்தின் பேரில் இந்தப் பெண்ணுடன் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சந்தேகநபர் கண்டி கண்ணொருவ பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்பதுடன் சந்தேகநபர்கள் இருவரும் பேராதனை, எரிகம மற்றும் முருதலாவ பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள்.

நிட்டம்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தொழிற்சாலை ஒன்றில் உதவி உத்தியோகத்தராக பணிபுரிந்து ஓய்வுபெற்ற 67 வயதுடைய நபர் ஒருவர் கடந்த 8 வருடங்களுக்கு முன்னர் தனது மனைவியை விவாகரத்து செய்துவிட்டு தனது சகோதரியின் வீட்டில் வசித்து வருவதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

அதன்பின்னரே திருமண விளம்பரமொன்றை அந்நபர் கொடுத்துள்ளார். அதிலிருந்த தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு கலந்துரையாடியதன் பின்னரே அப்பெண் 67 வயதான நபரை ஏமாற்றியுள்ளார்.

## 650 தொழிலாளர்கள் பணி பகிஷ்கரிப்பு

■ துவாரகஷான்

அக்கரப்பத்தனை பெருந்தோட்ட கம்பனிக்கு உட்பட்ட வெவரலி தோட்டத்தை சேர்ந்த ஆறு பிரிவுகளைச் 650 மேற்பட்ட தொழிலாளர்கள் திங்கட்கிழமை (07) பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

போட்மோர் , வெவரலி, ஆடலி, மோனிங்டன் கீழ் பிரிவு மேற் பிரிவு, ஆகிய தோட்டங்களை சேர்ந்த தொழிலாளர்களே பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

தேயிலை தொழிற்சாலையை தோட்ட நிர்வாகம் மூடுவதாக கூறியதற்கு எதிர்ப்பு தெரிவித்தே பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்தோடு 100 இற்கு மேற்பட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலைக்கு முன்பாக கவனஈர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், மலையக மக்கள் முன்னணி மற்றும் தொழிலாளர் தேசிய சங்கம் ஆகிய தொழிற்சங்க பிரதிநிதிகள் மற்றும் தோட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் ஆகியோருக்கு இடையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன்போது தொழிற்சாலையை உடனடியாக திறக்குமாறு தோட்ட அதிகாரியிடம் தோட்டம் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர் தோட்ட அதிகாரி தொழிற்சாலையை சீர் செய்து கொடுத்த பின்னரே திறக்கப்படும் என கூறினார்.

தோட்ட தொழிலாளர்கள் தொழிற்சாலை திறக்கும் வரை தாம் பறிக்கும் கொழுந்தினை முறையாக பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொண்டதோடு குறித்த காலத்தில் தொழிற்சாலையை திறக்காவிட்டால் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தப் போவதாக தொழிலாளர்கள் கூறினர்.

இதனையடுத்து கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் அங்கிருந்து கலைந்துசென்றனர்.

## மரம் முறிந்து விழுந்ததில் காயமடைந்தவர் மரணம்

■ மெய்யன்

மரமொன்று முறிந்து வீழ்ந்த சம்பவத்தில் காயமடைந்து வைத்தியசாலையில் மற்றுமொரு தோட்டத் தொழிலாளி பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் நெல்லிமலை பிரதேசத்தில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

இரு பிள்ளைகளின் தாயாரான 36 வயதான ஸ்ரீ.புவனேஸ்வரி என்பவரே இவ்வாறு பரிதாபமாக மரணமானார்.

கண்டி மடுல்கலை நெல்லிமலை அரச பெருந்தோட்ட யாக்கத்தைச் சேர்ந்த தோட்டத் தொழிலாளியான சண்முகம் விஜயலட்சுமி கடந்த ஜூலை 4 ஆம் திகதி புதன் கிழமை தேயிலை மலையில் வேலை செய்து சக தொழிலாளர்களுடன் தேநீர் பருகும் இடத்தில் தேநீர் பருகிக் கொண்டிருந்தபோது மரம் வீழ்ந்ததில் ஸ்தலத்திலேயே மயங்கி மரணமானாள்.

இச்சம்பவத்தில் மேலும் ஐந்து பேர் காயமடைந்தனர். அவர்களில் ஸ்ரீ. புவனேஸ்வரி என்னும் தொழிலாளி கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி திங்கட்கிழமை (07) வைத்தியசாலையில் மரணமானார்.

## இந்திய பிரஜைகள் 7 பேருக்கு எரிகாயம்

கெஸ்பேவ தியகம வீதியில் அமைந்துள்ள தனியார் நிறுவனமொன்றின் இரும்பு உருக்கும் கொதிகலனில் இருந்து இரும்பு துண்டுகள் வெளியே வீசப்பட்டதில் அங்கு பணிபுரியும் இந்திய பிரஜைகள் 7 பேர் தீக்காயங்களுடன் களுபோவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கெஸ்பேவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மன அழுத்தங்களில் இருந்து மீட்க வீட்டுத்தோட்டம் சிறந்த பரிகாரம்



■ மாணாக்க உழவர் நிகழ்ச்சியில் ஐங்கரநேசன் சுட்டிக்காட்டு

எமது மாணவர்கள் பல்வேறு காரணங்களினால் மனஅழுத்தங்களுக்கு ஆளாகி வருகிறார்கள். இதன் வெளிப்பாடுகளில் ஒன்றாகவே அவர்களால் சரிவரக் கற்றலை மேற்கொள்ள முடியவில்லை. போதை, வன்முறை என்று சமூகப்பிறழ்வான நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்களில் ஒருசாரார் தற்கொலை முடிவை நோக்கியும் செல்கிறார்கள். இவர்களை மனஅழுத்தங்களில் இருந்து விடுவிக்க வீட்டுத்தோட்டங்களில் அவர்களை ஈடுபடுத்துவதுதான் சிறந்த பரிகாரமாக அமையும். இது அறிவியல் பூர்வமாக நிரூபிக்கப்பட்ட வழிமுறையாகும் என்று தமிழ்த் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டி உள்ளார்.

தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் மாணாக்க உழவர் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு விதைப் பொதிகளையும் செயன்முறைப் பயிற்சிகளையும் வழங்கும் நிகழ்ச்சி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் ஞாயிற்றுக்கிழமை (06) இடம்பெற்றது.

இந்நிகழ்சிக்குத் தலைமை வகித்து உரையாற்றியபோதே ஐங்கரநேசன் இவ்வாறு சுட்டிக்காட்டி உள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

வீட்டுத்தோட்டங்கள் சுயசார்புப் பொருளாதாரத்தின் முதற்படி. வீட்டிலேயே எங்களுக்குத் தேவையான உணவுப் பயிர்களை உற்பத்தி செய்யக் கூடியதாக இருப்பதோடு வீட்டுக்கழிவுகளைப் பசளையாகப் பயன்படுத்துவதால் நஞ்சற்ற உணவையும் நாம் பெறக்கூடியதாக உள்ளது. நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கும், உணவு நெருக்கடிக்கும் வீட்டுத்தோட்டம் சிறந்த தீர்வாக அமையும். இந்த அனுகூலங்களைவிட மேலான அனுகூலமாக வீட்டுத்தோட்டங்கள் மனதை அலைபாயவிடாமல் சிந்தனைகளை ஒருமுகப்படுத்தவும் உதவுகின்றது.

தோட்டங்களில் மண்ணைக் கைகளினால் அளையும்போது, மண்ணில் உள்ள பக்றீரியங்களைத் தொடும்போது உடலில் செரற்ரோனின் என்ற ஓமோன் சுரப்பது தூண்டப்படுகிறது. ஆய்வுரீதியாக நிரூபிக்கப்பட்ட ஓர் உண்மை இது. செரற்ரோனின் மனச்சோர்வைக் களைந்து, மனஅழுத்தங்களில் இருந்து விடுபடவைத்து, மனஆரோக்கியத்தை மேம்படுத்தும் ஒரு இரசாயனம் ஆகும். இயற்கையாக செரற்ரோனின் உருவாகுவதைத் தூண்டும் வீட்டுத்தோட்டச் செய்கையில் மாணவர்களை ஈடுபடுத்தினால் செயற்கையாக உற்சாகத்தைத் தூண்டும் ஆபத்தான போதைக்கு அவர்கள் அடிமையாக மாட்டார்கள் என்றார்.

# பாதாளத்தை நோக்கிய பயணமும் திண்டாடும் சாமானியர்களும்

இது அரசியல் செய்யும் நேரமில்லை என்பதை அரசியலில் இருப்பவர்களும், மக்களைக் கவர்ந்து இழுக்கும் வகையிலான அறிவிப்புகளை விடுவதற்கான நேரமும் இல்லை என்பதை அரசாங்கமும் நன்கு புரிந்துவைத்துக் கொள்ளவேண்டும். மக்கள் அன்றாடம் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு உரிய தீர்வை தேடிக்கொடுக்க வேண்டும் என்பதை நினைவில் கொள்வது அவசியம்.

எனினும், நமது நாட்டை பொறுத்தவரை சாமானிய மக்களை ஓர் ஒதுக்குப் புறமாக வைத்துவிட்டு அரசியல் கட்சிகள் பலவும் அரசியல் இருப்புக்காகவும் அரசியல் கூட்டணிக்காகவும், ஆட்சியை கைப்பற்றும் நோக்குடனும் அரசியல் செய்து கொண்டிருக்கின்றன.

இல்லையேல், 2024 ஆம் ஆண்டு நடத்தப்பட இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்ற ஜனாதிபதித் தேர்தல் அல்லது பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கு ஆராய்ந்துகொண்டு இருக்கின்றனர், அணிகளைத் தயார்படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும்.

"ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுக்குள் பிளவு", "ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஒரு தரப்பு பலப்படுத்த முயற்சிக்கிறது". "ஆட்களை இழுத்தெடுக்க வேண்டாம்", "நாங்கள் ஆட்சிபீடம் ஏறுவோம்", "அரசியலமைப்பின் 13ஆவது திருத்தம்", "சர்வகட்சி மாநாடு", "13 எதிராக குரல்கொடுப்போம்", "நாடு துண்டாடப்படுகின்றது" இப்படியெல்லாம் கதையளக்கப்படுகின்றன.

எனினும், விலைவாசி அதிகரிப்பு, பொருட்களின் விலைகள் அதிகரிப்பு, இதர சேவைகளின் கட்டணங்கள் அதிகரிப்பு தொடர்பிலோ அல்லது நாட்டில் ஏற்பட்டிருக்கும் மருந்துப் பொருட்களின் தட்டுப்பாடு உள்ளிட்டவை குறித்தோ எவரும் வாய்திறப்பதில்லை.

பற்றாக்குறைக்கு வரட்சியும், மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கின்றது. வரட்சியால், விளைநிலங்கள் வரண்டுவருகின்றன. அறுவடைக்குத் தயாராக இருந்த காய்கறிகள் காய்ந்து கருகிவிட்டன. ஆறுகளிலும், குளங்களிலும் நீர் வற்றிவிட்டது. இவற்றுக்கெல்லாம் தூரநோக்கு சிந்தனை இன்மையே பிரதான காரணமாகும். இதன் தாக்கத்தை சாமான்ய மக்கள் எதிர்காலத்திலும் அனுபவிக்கவேண்டும்.

கடந்த பல மாதங்களாக நாட்டில் நிலவிய வரட்சியை அவதானித்து இருந்திருந்தால் மாற்று ஏற்பாடுகளை அல்லது முன்கூட்டிய ஏற்பாடுகள் செய்திருக்கலாம். எனினும், அரசியலில் தங்களை நிலைநிறுத்திக்கொள்ள வேண்டும் என்ற சிந்தனையில் இருந்தமையால், எல்லாமே தவிடு பொடியாகிவிட்டது.

கொளுத்தும் வெயிலால், வெளியில் தலையைக் காட்டமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. சூட்டைத் தணிப்பதற்கு நீர் அருந்தவேண்டும். நீராகாரங்களை பிள்ளைகளுக்கு உணவாகக் கொடுக்கவேண்டும் என்றெல்லாம் அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனினும், தண்ணீர்க் கட்டண அதிகரிப்பால் சாமான்ய மக்கள் பலரும் விழிபிதுங்கி நிற்கின்றனர்.

அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக கூட்டாஞ்சோறு ஆக்குவதை நிறுத்திவிட்டு, மக்கள் அன்றாடம் முகங்கொடுக்கும் பொதுவான பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதே சாலச் சிறந்தது.

பொருளாதாரத்தில் இருந்து நாடு மீண்டெழுந்துள்ளது என்பது பொய்த்துள்ளது. பாதாளத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. இது சாதாரண மக்களை வதைக்கிறது. ஆகையால், அதற்குத் தீர்வு காண்பதே காலத்தின் கட்டாயமாகும். அதனை கண்டுக்கொள்ளாவிடின் மக்களும் மறந்துவிடுவார்கள்.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk





## வாழ்வியல் தரிசனம்

ஒருவர் தன்னில் இருந்துதான் விடுதலை பெறவேண்டும். அதேபோல், பிறரிடம் இருந்தும் விடுதலை பெறவேண்டும். பிரச்சினைகளை உருவாக்கியவர்களிடம் இணையத்தேவையே இல்லை.

மனிதர் எந்த நேரமும் ஏதாவது பிரச்சினைகளில் இருந்து விடுபட இயலாமல் மனம் குமைந்தபடி இருக்கிறார்கள். தேவையற்ற எண்ணங்களை அறுக்க, மனிதரால் முடிவதில்லை. அதனோடு சங்கமித்து விடுகின்றார்கள்.

தனது ஆன்மாவை அமைதியாக வைத்திருக்க வேண்டிய கடமை, யாவருக்கும் உண்டு. எனவே, தன்னை உணர்ந்து கொண்டு தேவையற்ற சுமைகளை அறுத்துவிடுவது நல்லது.

தனிமை தேவையானது; அதை நாங்கள் துறத்தலாகாது.

நாங்கள் பல சந்தர்ப்பங்களில், தேவையற்ற விடயங்களில் பிறர் பொருட்டு, ஆஜராகி விடுகின்றோம். இதனால் அமைதி குன்றுகின்றது. உதவி புரிதல் எமது கடமை. அதனால், தேவையில்லாமல் பொறியில் சிக்குவது புத்திசாலித்தனமானது அல்ல! எனவே, பிறரிடம் இருந்தும் விடுதலை பெறவேண்டியவராக இருக்க வேண்டும். அதற்காக உறவுகளை, எம்முடன் இணைந்தவர்களை வெறுக்கக்கூடாது. யாருக்கு உதவி செய்வது, எப்படிச் செய்வது என்பதை ஒருபக்கப் பார்வையால் தீர்மானித்துவிட முடியாது. எனவே, உள்ளம் நல்லதைச் சொன்னால் கேளுங்கள்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

# முஸ்லிம் தரப்பு நிலைப்பாட்டை வெளிப்படுத்த வேண்டிய தருணம்

மொஹமட் பாதுஷா

அரசியல் தீர்வு பற்றிய கதையாடல்கள் உச்சக்கட்டத்தில் இருக்கின்றன. அரசியல் தீர்வு என்ற தோரணையில் 13ஆவது திருத்தத்தின் பெரும் பகுதியோ அல்லது சமஷ்டிக்கு சமமான ஒரு ஏற்பாடோ இன்னும் சில மாதங்களுக்குள் கிடைத்துவிடும் என்று போலத்தான் தோற்றப்பாடுகள் கட்டமைக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் மற்றும் சர்வதேச அழுத்தங்களைக் கடந்து செல்வதற்கான ஒரு கருவியாகவே இது பயன்படுத்தப்படுகின்றது என்ற அபிப்பிராயங்களும் உள்ளன. இதுவெல்லாம் "அடுத்த அரசியல் அடைவை இலக்காகக் கொண்ட நாடகம்" அல்லது "படம் காட்டுதல்" என்றும் ஒரு தரப்பினர் கூறுகின்றனர்.

இதேவேளை சரத் வீரசேகர, உதய கம்மன்பில போன்றோர் கூறிவருகின்ற 13 இற்கு எதிரான கருத்துக்களுக்கு அரச உயர் மட்டம் பதிலெதுவும் அளிக்கவில்லை. இவர்கள் இருவரும் பெருந்தேசிய அரசியலின் பதச்சோறுகள் என்பதை அரசியல் அறிவுள்ளவர்கள் அறிவார்கள். எனவே நினைக்கின்ற மாதிரி எதுவும் நடக்காது என்ற அபிப்பிராயம் பரவலாகவே உள்ளது.

கடந்தகாலத்தில் இனப் பிரச்சினைக்கான தீர்வு, சமாதானப் பேச்சுகள் மற்றும் தேசிய முக்கியத்துவமிக்க விவகாரங்கள் முன்னெடுக்கப்பட்ட போது முஸ்லிம் தலைவர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் காத்திரமாகச் செயற்படவில்லை. இப்போதும் அதேநிலைமை நீடிப்பதைக் காணமுடிகின்றது.

ஒரு சிறிய தீர்வையேனும் அரசாங்கம் வழங்கும் முடிவை எடுக்கும் நிலை வந்தால் அந்தக் கடைசிக் கட்டத்தில் முஸ்லிம் தலைவர்கள், தளபதிகள் என்ன செய்வார்கள்?

முப்பது வருடங்களாக முஸ்லிம்களின் பிரச்சினைகளை ஆவணப்படுத்தி உள்நாட்டிலும் சர்வதேச அரங்கிலும் முன்வைத்து மக்கள்மயப்படுத்தி பதவி-பண ஆசைகளை துறந்து மக்களின் அபிலாசைகளை வென்றெடுப்பதில் வெற்றிபெறாத முஸ்லிம் தலைவர்களும் எம்.பி.க்களும் முப்பது நாட்களில் சாதிப்பார்கள் என எதனை வைத்து நம்புவது?

தமிழர்கள் நூறு வீதம் திருப்திப்படும் ஒரு முழுமையான தீர்வு இப்போதைக்கு சாத்தியமானதாகத் தெரியவில்லை. ஆனால் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த ஜனாதிபதி முயற்சி செய்கின்றார், இந்தியாவின் அழுத்தம் மட்டுமன்றி தமிழ் அரசியல்வாதிகளின் நகர்வுகளும் இதற்கு காரணமெனலாம்.

அதன் பிரகாரம் மாகாண சபை தேர்தல் நடத்தப்பட்டு 13 இன் பெரும்பாலான அதிகாரங்கள் வழங்கப்படலாம். உத்தியோகபூர்வமான சமஷ்டியோ அல்லது 13 இன் முழுமையான அதிகாரங்களோ கொடுக்கப்படுவது சாத்தியமற்றது. அப்படிச் செய்வது என்றால் பெருந்தேசிய அரசியலில் ஒரு பிரளயத்தை கடந்து வர வேண்டியிருக்கும்.

இதில் எது வழங்கப்பட்டாலும் அதில் முஸ்லிம் சமூகத்தின் எதிர்பார்ப்பு, அபிலாஷை, பங்கு,உரிமை உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அனைவரும் நினைவிற் கொள்ள வேண்டும்.

முஸ்லிம்கள் ஒரு தனியான தேசிய இனம் என்பது மட்டுமன்றி யுத்தத்தால் அநாவசியமான முறையில் பாதிக்கப்பட்ட சமூகமும் ஆகும். தமிழர்களின் கோரிக்கைகள் நியாயம் என கருதிய காலம் வரைக்கும் முஸ்லிம்கள் தமது தார்மீக ஒத்துழைப்பை வழங்கினர். இன்றும் தமிழர்களின் நியாயங்களை ஏற்கின்றனர்.

முஸ்லிம்களிற்கு ஒருபோதும் தனிநாடு தேவைப்படவில்லை. ஆனால் போராட்டக் களத்தில் தமிழர்களுக்காக களமாடிய முஸ்லிம் இளைஞர்களை தமிழ் சமூகம் மறந்துவிடக் கூடாது.

மறுபுறத்தில் தேசியபாதுகாப்பு படைகளில் இணைந்து கொண்டு நாட்டின் பாதுகாப்பிற்காக இன்றுவரை கணிசமான முஸ்லிம் இளைஞர்கள் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்தச் சூழலில் தமிழ் ஆயுதக் குழுக்கள் முஸ்லிம்கள் மீது 90களில் நிகழ்த்திய அட்டூழியங்கள் சொல்லிமாளாது. சமகாலத்தில் அங்குமிங்குமாக முஸ்லிம் சண்டியர்கள் அப்பாவி தமிழ் மக்களை வஞ்சித்ததையும் குறிப்பிட வேண்டும். அவ்வப்போது முஸ்லிம் சமூகம் அரச படைகளின் நெருக்குவாரங்களையும் எதிர்கொண்டது.

முஸ்லிம் சமூகம் இந்த இனப் பிரச்சினையும் நேரடியாகவே தொடர்புபட்டிருக்கின்றது என்பதை மறுக்க முடியாது. ஆகவே எந்த வகையிலான தீர்வு வந்தாலும் அதில் முஸ்லிம்களின் பங்கும் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்பதை மறுதலிக்க முடியாது.

இப்போது தமிழ் கட்சிகள் உட்பட நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளிடம் இருந்தும் 13ஆவது திருத்தம் தொடர்பான கருத்துக்களை ஜனாதிபதி அலுவலகம் எழுத்துமூலம் கோரியிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

முன்னதாக "வடக்கு கிழக்கு இணைப்பு பற்றி பேசவே இல்லை" என்று ஜனாதிபதி அண்மையில் குறிப்பிட்டிருந்தார். இந்தப் பின்னணியில் மாகாண சபை தேர்தல் 13ஆவது திருத்தம் பற்றி மட்டும் அவர் பேசிவருகின்ற நிலையில் வடக்கு கிழக்கு மாகாண இணைப்பையும் சமஷ்டியையும் வலியுறுத்தி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தன் இந்திய பிரதமருக்கு மீண்டும் ஒரு கடிதத்தை எழுதியுள்ளார்.

எனவே இந்தத் தருணத்தில் முஸ்லிம் கட்சிகள் என்ன கருத்தை எழுத்து மூலம் சமர்ப்பிக்கப் போகின்றன? முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எவ்வாறான நிலைப்பாட்டை கூட்டாக முன்வைக்கப் போகின்றனர்? என்ற கேள்விக்கு விடைதேட வேண்டியிருக்கின்றது.

இனப் பிரச்சினை தீர்வு எந்த பருமனைக் கொண்டிருந்தாலும் அதில் முஸ்லிம்களுக்கு சில நிலைப்பாடுகள் உள்ளன. இதில் சில விடயங்கள் மறுதலிக்கவோ விட்டுக்கொடுக்கவோ முடியாதவை ஆகும்.

முதலாவது, வடக்கு கிழக்கு மாகாணங்கள் மீள இணைக்கப்படுவதை முஸ்லிம்கள் விரும்பவே இல்லை என்பதாகும். இணைந்த வடகிழக்கில் வரதராஜப் பெருமாள் முதலமைச்சராக இருந்தார். முஸ்லிம் உறுப்பினர்களும் மாகாண சபையில் இருந்தனர் என்பதை நாமறிவோம்.

இருப்பினும் அப்போதுதான் வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் மீதான அட்டூழியங்கள் ஏறுமுகமாக இருந்தன. வடக்கு முஸ்லிம்கள் வெளியேற்றம்,கிழக்கில் பல இடங்களில் இடம்பெற்ற படுகொலைகள் என பலவுள்ளன.

இந்த நிலையில் மீள வடக்கு,கிழக்கு இணைக்கப்படுவதால் இவ்விரு மாகாண முஸ்லிம்களும் ஒரேகுடையின் கீழ் வருவதைத் தவிர முஸ்லிம்களுக்கு எந்த நன்மையும் இல்லை. தமிழர்களுக்கு நன்மையுள்ளது. ஆனால் முஸ்லிம்களின் இன விகிதாசாரம் குறைவடைவது உள்ளடங்கலாக இதனால் ஏகப்பட்ட பிரதிகூலங்கள் ஏற்படும். எனவே இவ்விணைப்பை அவர்கள் விரும்பவில்லை.

13ஆவது திருத்தத்தின் ஒரு ஏற்பாடு என்ற வகையில் பொலிஸ் அதிகாரங்களை மறுக்க முடியாது. ஆயினும் பொலிஸ் அதிகாரங்கள் மாகாண சபைக்கு வழங்கப்படுவது தமக்கு அபத்தாக வந்து முடியும் என முஸ்லிம் சமூகம் நினைக்கின்றது. சுருங்கக் கூறின் இதற்குக் காரணம் ஆயுதக் கலாசாரத்தால் முஸ்லிம்கள் பெற்ற கடந்தகால அனுபவம் ஆகும்.

மூன்றாவது, காணி அதிகாரங்கள் வழங்கப்படுவது பிரச்சினை இல்லை. ஆனால், கிழக்கில் முஸ்லிம்களின் சனத்தொகையின் கால்வாசி அளவுக்குக் கூட காணிகள் இல்லை. எனவே வழங்கப்படுகின்ற காணி அதிகாரங்கள் முஸ்லிம்களின் பங்கையும் உறுதிப்படுத்துவதாக இருக்கவேண்டும்.

இதேவேளை,சமஷ்டி அல்லது அதனையொத்த ஒரு ஏற்பாடு வழங்கப்படுமாக இருப்பின், அதில்; முஸ்லிம்களின் அபிலாஷைகளும், கருத்துக்களும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்;. 1956ஆம் ஆண்டில் இருந்தே முஸ்லிம்கள் ஒருதனியினம் என்பதையும் அவர்களுக்கு தனியான ஒரு உப தீர்வு அல்லது ஏற்பாடு வழங்கப்படவேண்டும் என்பதையும் தமிழர் அரசியல் அங்கீகரித்து வந்திருக்கின்றது என்பது இவ்விடத்தில் நினைவுபடுத்த வேண்டியுள்ளது,

ஆகவே, முஸ்லிம் அரசியல் கட்சிகள், தலைவர்கள், எம்.பி.க்கள், முன்னாள் எம்.பி.க்கள் மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர்கள் மட்டுமன்றி சமூக, சமய அமைப்புக்களும் பல்கலைக்கழக சமூகமும் சேர்ந்து இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டிய முக்கியமான தருணம் இது.

தூக்கத்தில் பிதற்றுவது போல, நிலைப்பாடுகளை முன்வைக்காமல்... தூக்கத்தில் இருந்து சரியாக கண்விழித்து, சுயநல நோக்கங்களை புறந்தள்ளி சமூகநலனுக்காக அரசாங்கத்திடம் முஸ்லிம் தரப்பு கருத்துக்களை, கோரிக்கைகளை முன்வைக்கவும் பேசவும் வேண்டும்.

## கடிதங்கள்

### அதிக கட்டணம் அறவிடப்படுவதாக புகார்

கிளிநொச்சி பரந்தன் முறிகண்டி குறுந்தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பயணிகளிடம் அதிக கட்டணம் அறவிடப்படுவதுடன் பணத்திற்கான பற்றுச் சீட்டுக்கள் வழங்கப்படுவதில்லை என பயணிகள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்தள்ளனர்.

ஏ-09 வீதியின் திருமுறிகண்டி முதல் பரந்தன் வரைக்குமான 16 கிலோமீட்டர் வரையான குறுந்தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துகளில் பயணிகளிடம் அதிக கட்டணங்கள் அளவிடப்படுவதனால் பயணிகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர்அ

தாவது முறிகண்டி முதல் பரந்தன் வரைக்குமான 16 கிலோமீட்டர் தூரத்திற்கும் 96 ரூபாய் அறவிட வேண்டிய நிலையில் 120 ரூபாய்ப் முதல் 140 ரூபாய்ப் வரை அறவிடப்பட்டு வருகின்றது. இதேபோன்று டிப்போ சந்தியிலிருந்து பரந்தன் சந்தி வரைக்குமான கட்டணமாக 59 ரூபாய் வேண்டிய நிலையில் 80 முதல் 100 வரை பயணத்துக்கான கட்டணங்களாக அறவிடப்படுகின்றது.

இவ்வாறு அதிக தொகையான பணத்தை அறவிடுவது தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அதாவது குறித்த குந்தூர சேவையில் ஈடுபடும் பேருந்துகளில் பயணிக்கின்ற பாடசாலை மாணவர்களிடமும் இவ்வாறு அதிக பணம் அறவிடப்படுவதாகவும் மாணவர்களின் பெற்றோர்கள் தெரிவித்துள்ளனர்.

யது பாஸ்கரன்

# கடைசியில் நீங்களுமா..?



நடிகை காயத்ரி சங்கர் ஜப்பான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் செய்த நிலையில் தற்போது அங்கிருந்து அவர் நீச்சல் குளத்தில் பிகினி உடையில் உள்ள புகைப்படங்களை பதிவு செய்துள்ளார்.

இந்த புகைப்படங்களை பார்த்த ரசிகர்கள் 'கடைசியில் நீங்களுமா..? என கருத்து பதிவு செய்து வருகின்றனர்.

விஜய் சேதுபதி உடன் 'நடுவுல கொஞ்சம் பக்கத்த காணோம்' 'ஒரு நல்ல நாள் பார்த்து சொல்றேன்' 'புரியாத புதிர்' 'சூப்பர் டீலக்ஸ்' 'சீதக்காதி' 'மாமனிதன்' உள்ளிட்ட படங்களில் நடித்த காயத்ரி சங்கர், கமல்ஹாசனின் 'விக்ரம்' படத்தில் பஹத் பாசிலுக்கு ஜோடியாக நடித்திருந்தார்.

நடிகை காயத்ரி இன்ஸ்டாகிராமில் ஆக்டிவ்வாக இருப்பவர். இந்த நிலையில் அவர் ஜப்பான் நாட்டிற்கு சுற்றுப்பயணம் செய்த நிலையில் அங்கிருந்து கொண்டே அவர் புகைப்படங்கள் வீடியோக்களை பதிவு செய்து வருகிறார். அந்த வகையில் ஜப்பானில் உள்ள நீச்சல் குளத்தில் பிகினி உடையில் இருக்கும் போட்டோஷூட் புகைப்படங்களை அவர் பதிவு செய்திருக்கும் நிலையில் இதற்கு ஏராளமான கருத்துகள் பதிவாகி வருகிறது.



# களைகட்டும் மதுரை... 'லியோ' இசை வெளியீடு எங்கே?




தளபதி விஜய் நடித்த 'லியோ' திரைப்படத்தின் படப்பிடிப்பு முடிந்துவிட்ட நிலையில் அடுத்த கட்டமாக இந்த படத்தின் இசை வெளியீட்டு விழாவை பிரமாண்டமாக நடத்த படக்குழுவினர் திட்டமிட்டுள்ளனர்.

'லியோ' படத்தின் இசை வெளியீட்டு விழாவை சென்னையை தாண்டி வேறு ஒரு நகரில் நடத்த திட்டமிட்டிருந்த நிலையில் தற்போது மதுரையில் நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் இந்த படத்தின் இசை வெளியீட்டு விழா செப்டம்பர் 29 அல்லது 30 இல் நடக்க வாய்ப்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

கடந்த 2011 ஆம் ஆண்டு விஜய் நடித்த 'வேலாயுதம்' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழா மதுரையில் நடந்த நிலையில் 12 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் மதுரை 'லியோ' திரைப்படத்தின் இசை வெளியீட்டு விழாவால் களைகட்டப் போகிறது.

மேலும் 'லியோ' திரைப்படத்தின் ட்ரைலர் ஒக்டோபர் இரண்டாம் திகதி காந்தி ஜெயந்தி தினத்தன்று வெளியாகும் என்றும் கூறப்படுகிறது.

# கவின் காட்டில் மழை



நடிகர் கவின் நடித்த 'டாடா' என்ற திரைப்படம் நல்ல வரவேற்பை பெற்றதை அடுத்து அவர் தற்போது இரண்டு படங்களில் நாயகனாக நடித்து வருகிறார்.

அதில் ஒரு படத்தை இயக்குனர் இளன் இயக்கி வருகிறார். இந்த நிலையில் இந்த படத்தின் நாயகிகளாக நடிக்க இரண்டு நடிகைகளிடம் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாகவும் ஒருவர் 'லவ் டுடே' நாயகி இவானா, இன்னொருவர் 'பேச்சுலர்' நாயகி திவ்யபாரதி என்றும் கூறப்படுகிறது.

மேலும் இந்த படத்தின் டைட்டில் 'ஸ்டார்' என்று வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிகிறது.



# மீண்டும் வேற லெவல் கவர்ச்சி!



நடிகை ரம்யா பாண்டியன் தற்போது மீண்டும் கவர்ச்சிக்கு மாறி புகைப்படங்கள் வெளியிட்டுள்ளமை ரசிகர்கள் மத்தியில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

நடிகை ரம்யா பாண்டியன் இன்ஸ்டாகிராமில் சுமார் மூன்று மில்லியன் ஃபாலோவர்கள் வைத்திருப்பதுடன் அவ்வப்போது அவர் கவர்ச்சி புகைப்படங்கள், வீடியோக்களை பதிவு செய்து வந்தார்.

இந்த நிலையில் மீண்டும் அவர் கருப்பு காஸ்டியூமில் கவர்ச்சி போட்டோஷூட் படங்களை பதிவு செய்துள்ள நிலையில் இந்த பதிவுக்கு லைக் மற்றும் கருத்துகள் குவிந்து வருகின்றன.

# 'அங்காடி தெரு' நடிகை மரணம்!



வசந்தபாலன் இயக்கத்தில் உருவான 'அங்காடி தெரு'திரைப்படத்தில் நடித்த நடிகை சிந்து மார்பக புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார்.

'அங்காடி தெரு', 'நாடோடிகள்' உள்பட ஒரு சில படங்களில் குணச்சித்திர வேடங்களில் நடித்தவர் நடிகை சிந்து. இவர் கடந்த சில ஆண்டுகளாக மார்பக புற்றுநோய்க்கு சிகிச்சை பெற்று வந்ததாகவும் சிகிச்சை மிகவும் கடினமாக இருப்பதாக அவர் தனது நெருக்கமானவர்களிடம் கூறியதாகவும் தெரிகிறது.

இந்த நிலையில் சிகிச்சையின் பலன் இன்றி அவர் தனது வளசரவாக்கம் இல்லத்தில் காலமானார். இந்த தகவல் தமிழ் திரையுலகில் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

## நூல் கையளிப்பு





திருக்கோவில் பிரதேச விநாயகபுரம் கிராமத்தைச் சேர்ந்தவரும் இலங்கை பொலிஸ் திணைக்களத்தில் கடமை புரியும் பொலிஸ் சார்ஜன்ட்டுமான கிருஸ்ணபிள்ளை விஜிதாவின் "புதுவரவு " எனும் சிறுவர் பாடல் நூல், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானிடம் வழங்கி வைக்கப்பட்டது. திருக்கோவில் சித்திர வேலாயுத சுவாமி ஆலயத்தில் ஆலயபரிபாலன சபையின் தலைவர் சுந்தரலிங்கம் சுரேஷ் தலைமையில் இந்நூல் வழங்கி வைக்கப்பட்டது.

வி.ரி.சகாதேவராஜா

## விசேட நிகழ்வு





ஐக்கிய தேசிய கட்சியின் கல்முனைத் தொகுதி செயற்பாட்டாளர்களை ஒன்றிணைத்து, கட்சிக்கு புத்துயிரளிக்கும் விசேட நிகழ்வு கல்முனை அல்பஹ்ரியா மகா வித்தியாலய மண்டபத்தில் ஞாயற்றுக்கிழமை (06) நடைபெற்றது. நீண்ட காலமாக செயலிழந்து போயிருந்த கட்சியின் கல்முனை தொகுதிக்கான மத்திய குழுவுக்கு சிறிகொத்தவினால் நியமிக்கப்பட்ட புதிய நிர்வாகிகளுக்கு இதன்போது அங்கிகாரம் வழங்கப்பட்டதுடன் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

ஏயெஸ் மௌலானா

## சீருடை வழங்கி வைப்பு



பனங்காடு அக்னி விளையாட்டு கழக உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வானது அக்னி விளையாட்டு கழகத்தின் செயற்குழு உறுப்பினர் ரவீந்திரன் வினோஜன் தலைமையில், பனங்காடு விளையாட்டு மைதான கட்டிடத்தில் திங்கட்கிழமை (07) இடம்பெற்றது.

ஆலையடிவேம்பு பிரதேசத்தில் தனக்கென ஒரு இடத்தை வைத்துக் கொள்ளும் கழகமாகவும், பல சமூக, சமய செயற்பாடுகளில் அக்கறை காட்டும் கழகமாகவும் பனங்காடு அக்னி விளையாட்டு கழகம் திகழ்கின்றது. இவர்களை ஊக்கப்படுத்தும் விதமாக இளையதம்பி ரவிராஜ் அவர்களின் நிதி பங்களிப்பில் இளையதம்பி கவிராஜ் அவர்களின் பிரசன்னத்துடன், இணைந்த கரங்கள் அமைப்பினால் இந்த சீருடைகள் வழங்கி வைக்கப்பட்டது.

நிகழ்வில் அதிதியாக விளையாட்டு கழகத்தின் ஆலோசகர் ரமேஸ், கழக இயன் மருத்துவர் ரா. கரன், ஆலையடிவேம்பு விளையாட்டு உத்தியோகத்தர் நிஷாந்தன், ஆசிரியர் வாசன், மனோ ராஜ் இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான சுரேஷ், காந்தன் உட்பட ஏனைய உறுப்பினர்களும் கலந்து கொண்டு பனங்காடு அக்னி விளையாட்டு கழகத்திற்கான சீருடைய வழங்கி வைத்தனர்.

நூருல் ஹுதா உமர்

## புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு







ஆசிரியர் விடுதலை முன்னணி தமது அங்கத்தவர்களின் மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கும் நிகழ்வு நுவரெலியா புனித சவேரியார் கல்லூரி மண்டபத்தில் செயலாளர் நாயகம் என்.டி.எஸ்.நாதன் தலைமையில் நடைப்பெற்றது.

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் பெற்று சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் மாணவர்களுக்கும் அதேபோல க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் சித்தியடைந்த முன்னணியின் அங்கத்தவர்களின் மாணவர்களுக்கும் பல்கலைக்கழகங்களில் கல்வி பயிலும் முன்னணியின் அங்கத்தவர்களின் மாணவர்களுக்கும் இப்புலமைப்பரிசில்கள் வழங்கப்பட்டன.

பி.கேதீஸ்

## 45 ஆவது நினைவேந்தல்







வடமாகாணத்தில் தமிழில் முதல் ஜனாதிபதி சட்டத்தரணியாக நியமனம் பெற்ற செல்வி சாந்தா அபிமான சிங்கத்தின் 45 நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில், சிரேஷ்ட சட்டத்தரணி கு.குருபரன் தலைமையில் ஞாயிற்றுக்கிழமை (06) நடைபெற்றது.

யாழ்ப்பாண மாவட்ட இளம் சட்டத்தரணிகளின் எற்பாட்டில், நடைபெற்ற இந்நிகழ்வில், அமரரின் திருவுருவப் படத்திற்கு முதல் ஈகைச்சுடரினை கமலாதேவி ஏற்றினார். இந்த நினைவேந்தலுக்கு பிரதம அதிதியாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கலாநிதி கௌசலிய நவரட்ண கலந்துகொண்டார்.

பு.கஜிந்தன்

## 33வது ஆண்டு நினைவேந்தல்





திராய்க்கேணி படுகொலையின் 33வது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு சமூக செயற்பாட்டாளர் துரையப்பா காத்தவராயன்(காந்தன்) தலைமையில் திராய்க்கேணி சித்திவிநாயகர் ஆலய முன்றலில் ஞாயிற்றுக்கிழமை (06) மாலை நடைபெற்றது.

அங்கு அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் சமூக செயற்பாட்டாளர் தா. பிரதீபன் உள்ளிட்ட பல பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.

வி.ரி.சகாதேவராஜா

## அனுபவக் கற்கைகள் விஜயம்



மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களில் கைத்தொழில் துறையில் ஈடுபடும் உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு வடபகுதியில் உள்ளூர் வளங்களைக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் நானாவித உற்பத்திப் பொருட்களையும் கைத்தொழில்துறை சார்ந்த நுணுக்கங்களையும் அறிந்து கொள்ளும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்ட வடபகுதிக்கான அனுபவக் கற்கைகள் விஜயம் வாரஇறுதியில் (06,07) இடம்பெற்றது. கூட்டுறவு உற்பத்திச்சங்கங்களின் உற்பத்தியாளர்களினால் மேற்கொள்ளப்படும் விவசாய உணவு உற்பத்திகள், ஏனைய பாவினைப் பொருட்கள், ஆயர்வேத மருந்துப் பொருட்கள் இன்னும் துறைசார்ந்த உற்பத்திப் பொருட்கள் இக்கள விஜயத்தின்போது பார்வையிடப்பட்டன.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்





## சான்றிதழ் கற்கைநெறி







அம்பாறை மாவட்ட பெண்கள் வலையமைப்பு ஏற்பாடு செய்த மூன்று மாத கால சமூகசெயற்பாடு சான்றிதழ் கற்கைநெறி பிரதி சனி, ஞாயிறு தினங்களில் கிரமமாக நடைபெற்று வருகிறது.

இதன் அங்குரார்ப்பண வைபவம் , பெண்கள் வலையமைப்பின் தலைவி திருமதி தியாகேஸ்வரி ரூபன் தலைமையில் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தில் சனிக்கிழமை (22) நடைபெற்றது.

வி.ரி.சகாதேவராஜா

இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கொமியுனிட்டி ஷீல்ட் போட்டி:

# மன்செஸ்டர் சிற்றியை வென்ற ஆர்சனல்




இங்கிலாந்து கால்பந்தாட்டச் சங்க கொமியுனிட்டி ஷீல்ட் போட்டியில் மன்செஸ்டர் சிற்றியை ஆர்சனல் வென்றது.

கடந்த பிறீமியர் லீக் பருவகால முதலாம், இரண்டாம் அணிகளுக்கிடையிலான இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் தலா ஒவ்வொரு கோலைப் பெற்று 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் இருந்தன. சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை கோல் பல்மரும், ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை லியன்ட்ரோ ட்ரோஸார்ட்டும் பெற்றிருந்தனர்.

இந்நிலையில் பெனால்டியில் 4-1 என்ற ரீதியிலேயே போட்டியில் ஆர்சனல் வென்றிருந்தது. இதில் சிற்றியின் அணித்தலைவர் கெவின் டி ப்ரூனே தனதுதையை கோல் கம்பத்தில் செலுத்தியதோடு, றொட்றியின் உதையை ஆர்சனலின் கோல் காப்பாளர் ஆரோன் ரம்ஸ்டேல் தடுத்திருந்தார். பெர்னார்டோ சில்வா மாத்திரமே சிற்றி சார்பாக தனதுதையை கோல் கம்பத்துக்குள்ளே செலுத்தியிருந்தார். ஆர்சனல் சார்பாக அணித்தலைவர் மார்டின் ஒடெகார்ட், ட்ரோஸார்ட், புகாயோ ஸாகா, பேபியோ வியர்ரா ஆகியோர் தமதுதைகளை உள்ளே செலுத்தியிருந்தனர்.

ஈஸ்டர்ன் பிறீமியர் லீக் சம்பியன் கிண்ணத் தொடர்:

# அரையிறுதியில் நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம்

■ அஸ்ஹர் இப்றாஹீம்



ஈஸ்டர்ன் பிறீமியர் லீக் சம்பியன் கிண்ண கிரிக்கெட் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு நிந்தவூர் இம்ரான் விளையாட்டுக் கழகம் தகுதி பெற்றுள்ளது.

கல்முனை சந்தாங்கேணி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற காலிறுதிப் போட்டியில் சாய்ந்தமருது பிளையிங் ஹோர்ஸ் விளையாட்டுக் கழகத்தை வென்றே அரையிறுதிப் போட்டிக்கு இம்ரான் தகுதி பெற்றிருந்தது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய□இம்ரான் 10 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 80 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 81 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பிளையிங் ஹோர்ஸ் 10 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 76 ஓட்டங்களையே பெற்று நான்கு ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக இம்ரான் வீரர் நிஸ்கி அஹமட் தெரிவானார். தவிர, போட்டியில் மூன்று சிறப்பான□பிடியெடுப்புகளை நிகழ்த்திய இளம் வீரர் அரபாத் அஹமட் நிஸ்கி அஹமட்டால் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான தொடர்:

# சம்பியனான லிவர்பூல்

■ எம்.யூ.எம். சனூன்



புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தால் நடாத்தப்பட்ட 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரில் லிவர்பூல் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

அணிக்கு ஒன்பது பேரைக் கொண்ட புத்தளம் மாவட்ட விளையாட்டரங்கில் அண்மையில் நடைபெற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் த்ரீ ஸ்டார் விளையாட்டுக் கழகத்தை வென்றே லிவர்பூல் சம்பியனானது.

இப்போட்டியின் வழமையான நேரத்தில் இரண்டு அணிகளும் கோலெதனையும் பெறாமல் போட்டி சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து நடைபெற்ற பெனால்டியில் 5-4 என்ற ரீதியில் வென்றே லிவர்பூல் சம்பியனானது.

போட்டியின் முடிவில் உரையாற்றிய புத்தளம் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் தலைவர் எம்.எஸ்.எம். ரபீக், விரைவில் அடுத்த கட்டமாக 21 வயதுக்குட்பட்டவர்களுக்கான கால்பந்தாட்டத் தொடரை நடாத்தவுள்ளதாகத் தெரிவித்தார்.

பனங்காடு அக்னி விளையாட்டு கழக உறுப்பினர்களுக்கு

# இணைந்த கரங்கள் அமைப்பால் சீருடை வழங்கி வைப்பு

■ நூருல் ஹுதா உமர்



பனங்காடு அக்னி விளையாட்டு கழக உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கும் நிகழ்வானது, அக்னி விளையாட்டு கழகத்தின் செயற்குழு உறுப்பினர் ரவீந்திரன் வினோஜன் தலைமையில் பனங்காடு விளையாட்டு மைதான கட்டடத்தில் நேற்று நடைபெற்றது.

இரண்டாவது இருபதுக்கு □ 20 சர்வதேசப் போட்டியிலும்

# இந்தியாவை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள்

இந்தியாவுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு □ 20 சர்வதேசப் போட்டித் தொடரில், கயானாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இரண்டாவது போட்டியிலும் மேற்கிந்தியத் தீவுகள் வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

இந்தியா: 152/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: திலக் வர்மா 51 (41), இஷன் கிஷன் 27 (23), ஹர்டிக் பாண்டியா 24 (18) ஓட்டங்கள். பந்துவீச்சு: அல்ஸாரி ஜோசப் 2/28 [4], றொமாரியோ ஷெப்பர்ட் 2/28 [3], அகீல் ஹொஸைன் 2/29 [4], ஒபெட் மக்கோய் 0/25 [4], ஜேஸன் ஹோல்டர் 0/29 [4])

மே. தீவுகள்: 155/8 (18.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: நிக்கலஸ் பூரான் 67 (40) ஓட்டங்கள். பந்துவீச்சு: ஹர்டிக் பாண்டியா 3/35 [4], யுஸ்வேந்திர சஹால் 2/19 [3], அர்ஷ்டீப் சிங் 1/34 [4], ரவி பிஷ்னோய் 0/31 [4])

புதுடெல்லி

# சபைக்கு வந்தார் ராகுல் காந்தி



தகுதி இழப்பு இரத்து செய்யப்பட்டதைத் தொடர்ந்து, நடப்பு மழைக்கால கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ராகுல் காந்தி 4 மாதங்களுக்கு பின்னர் பாராளுமன்றம் வந்தார். அவரை 'ராகுல் காந்தி ஜிந்தாபாத்' என முழங்கி எதிர்க்கட்சிகளின் 'இண்டியா' கூட்டணி எம்.பி.க்கள் வரவேற்றனர்.

மோடி பெயர் குறித்த அவதூறு வழக்கில் காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தியின் 2 ஆண்டு சிறைத் தண்டனைக்கு உச்ச நீதிமன்றம் தடை விதித்ததை அடுத்து, ராகுல் காந்தியின் தகுதி இழப்பை மக்களவைச் செயலகம் இரத்து செய்தது.

இதனைத் தொடந்து நடப்பு மழைக்கால கூட்டத்தொடரில் பங்கேற்கும் விதமாக பகல் 12 மணிக்கு ராகுல் காந்தி பாராளுமன்றம் வந்தார். அவரை வரவேற்கும் விதமாக 'இண்டியா' கூட்டணி தலைவர்கள் 'ராகுல் காந்தி ஜிந்தாபாத்' என முழக்கம் எழுப்பி வரவேற்றனர்.

ராகுல் காந்தியின் நாடாளுமன்ற மறுவருகையைக் கொண்டாடும் விதமாக காங்கிரஸ் எம்.பி.க்கள் பாராளுமன்றத்துக்கு வெளியே இனிப்பு வழங்கி மகிழ்ந்தனர். முன்னதாக, பாராளுமன்ற வளாகத்தில் உள்ள மகாத்மா காந்தி சிலைக்கு ராகுல் காந்தி மரியாதை செய்தார்.

ராஜஸ்தான்

# பாகிஸ்தான் பெண்ணை நிகழ்நிலையில் கரம்பிடித்த இந்தியர்



ராஜஸ்தான் மாநிலம் ஜோத்பூரை சேர்ந்தவர் முகமது அர்பாஸ். இவரும் பாகிஸ்தானின் கராச்சி நகரை சேர்ந்த இளம்பெண் அமீனாவும் சமூக வலைதளம் மூலமாக காதலித்து வந்தனர். இவர்களது காதல் விவகாரம் இரு வீட்டாருக்கும் தெரியவந்தது. இதை தொடர்ந்து அவர்களுக்கு திருமணம் நடத்த அவர்கள் திட்டமிட்டனர்.

பாகிஸ்தானின் கராச்சி நகரில் திருமண விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டது. இதனிடையே மணமகன் அர்பாஸ் குடும்பத்தினருக்கு விசா கிடைப்பதில் சிக்கல் எழுந்தது. இதைத் தொடர்ந்து நிகழ்நிலை (ஒன்லைன்) மூலமாக திருமணம் செய்ய திட்டமிடப்பட்டது. பாகிஸ்தான் சென்று திருமணம் செய்தால் அது இந்தியாவில் செல்லாது என்பதால் இந்தியாவில் இருந்தபடியே அமீனாவை மணமுடிக்க அர்பாஸ் திட்டமிட்டார். அதன்படி காணொலி வாயிலாக முஸ்லிம் முறைப்படி திருமண சடங்குகள் நடைபெற்றன.

# முதல் வீடியோவை வெளியிட்டது இஸ்ரோ



ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து கடந்த ஜூலை 14-ம் திகதி சந்திரயான் 3 விண்கலம் புறப்பட்டது. புவி வட்டப் பாதையில் இருந்து நிலவின் சுற்றுவட்டப் பாதைக்குள் சந்திரயான் 3 விண்கலம் நுழைந்தது.

புவியை சுற்றி வந்த விண்கலம் நிலவை சுற்றத் தொடங்கியது. சந்திரயான்- 3 இம்மாத இறுதிக்குள் நிலவில் தரையிறங்கும் என இஸ்ரோ விஞ்ஞானிகள் தகவல் தெரிவித்துள்ளனர். சந்திரயான்- 3 செயல்பாடுகள் குறித்து இஸ்ரோ விஞ்ஞானிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். இந்நிலையில், சந்திராயன் 3 எடுத்த நிலவின் வீடியோவை இஸ்ரோ வெளியிட்டுள்ளது.

# தைவானை தாக்க தயாராகும் சீனா




தீவு நாடான தைவானை தனக்கு சொந்தமானது எனக் கூறி வரும் சீனா, தேவைப்பட்டால் இராணுவ ஆக்ரமிப்பு மூலம் அந்நாட்டை கைப்பற்ற போவதாக பலமுறை கூறியிருக்கிறது.

கடந்த ஏப்ரல் மாதம் "ஜாயின்ட் ஸ்வார்ட்" (Joint Swrd) எனும் தைவானுக்கெதிரான ஒரு இராணுவ பயிற்சியை சீனா மேற்கொண்டது. கடந்த மாதம், தைவானுக்கு அமெரிக்கா ரூ.2800 கோடி ($345 மில்லியன்) மதிப்பிலான இராணுவ உதவியை வழங்கியது.

ஆனால், இதற்கு சீனா தனது எதிர்ப்பை தெரிவித்தது. இந்நிலையில் சீன இராணுவத்தின் 96-வது ஆண்டு விழாவை குறிக்கும் விதமாக சீனா ஓர் ஆவணப்படத்தை வெளியிட்டுள்ளது. அதில் போருக்கு தயாரான நிலையில் இராணுவம் இருப்பதுபோல் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதில் சீன வீரர்கள் நாட்டிற்காக உயிரையும் தியாகம் செய்ய தயாராக உறுதி எடுத்து கொள்கின்றனர்.


தைவான் நாட்டை எதிர்க்க சீனா இராணுவத்தில் உள்ள கிழக்கு பகுதி அமைப்பை சேர்ந்த சீன இராணுவ விமானப்படை பைலட் உறுதிபட கூறியிருப்பது தெரிகிறது.

தங்களின் உடலையும் உயிரையும் தியாகம் செய்ய தயார் என நீருக்கடியில் மூழ்கி இராணுவ நடவடிக்கைகளில் ஈடுபடும் "ஃப்ராக் மேன்" படை வீரர் ஒருவர் கூறுகிறார். ஜாயின்ட் ஸ்வார்ட் பயிற்சி சம்பந்தமான காட்சிகளும், இராணுத்தின் பல அமைப்பின் வீரர்களின் கதைகளும், இராணுவ பயிற்சிகளும் இதில் இடம்பெற்றிருக்கிறது. இது தைவான் நாட்டிற்கு சீனா விடும் எச்சரிக்கைபோல் இருப்பதாக அரசியல் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.

சேஸிங் ட்ரீம்ஸ் என இந்த ஆவணப்படத்திற்கு சீனா பெயரிட்டுள்ளது. தைவானை அச்சுறுத்தும் விதமாக தைவான் ஜலசந்தி பகுதியில் சீன இராணுவம் வான்வழி இராணுவ பயிற்சிகளை மேற்கொண்டது குறிப்பிடத்தக்கது.

வொஷிங்டன்

# தண்ணீர் குடித்த பெண் திடீர் பலி



அமெரிக்காவில் 35 வயது பெண் ஒருவர் 2 லீட்டர் தண்ணீரை- அதாவது 4 பாட்டில் தண்ணீரை குடித்து திடீரென உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

இது குறித்து, உயிரிழந்த பெண்ணின் மூத்த சகோதரர் டெவன் மில்லர் கூறியதாவது: வெயிலில் இருந்து தப்பிக்க தண்ணீர் குடியுங்கள் என யாரோ சொன்னதைக் கேட்டு அவர் 20 நிமிடங்களில் நான்கு பாட்டில் தண்ணீரை குடித்துள்ளார். 20 நிமிடங்களில் சுமார் 2 லீட்டர் தண்ணீர் குடித்துள்ளார்.

இதையடுத்து சிறிது நேரத்தில் அவர் திடீரென மயங்கி விழுந்தார். அவருக்குச் சுயநினைவு திரும்பவில்லை. அதன் பின்னரே அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு நிலைமை மோசமானது. பின்னர் அவர் உயிரிழந்தார். இவ்வாறு அவர் கூறினார்.

இது குறித்து டாக்டர் பிளேக் ப்ரோபெர்க் கூறியதாவது: இது போன்ற சம்பவங்கள் கோடைக் காலத்தில் தான் அதிகம் ஏற்படும். ஏனென்றால் அப்போது தான் வெயில் காரணமாக திடீரென அதிகமான நீரை எடுத்துக் கொள்வார்கள். உடலில் அதிக தண்ணீர் சத்து இருந்தும், போதுமான சோடியம் இல்லாமல் போனால் இது போன்ற உயிரிழப்புகள் ஏற்படலாம் என்றார்.

நியூயோர்க்

# மஸ்க்- மார்க் நேருக்கு நேர் சண்டை



உலகின் மிகப்பெரிய தொழிலதிபர்களான எலான் மஸ்க்கும், மார்க் ஜூக்கர்பெர்க்கும் நேருக்கு நேராக நிஜமாகவே சண்டை போடப் போகிறார்கள்.

இது டிவிட்டரில் நேரலையில் ஒளிபரப்பு செய்யப்படும் என மஸ்க் அறிவித்துள்ளார். உலகின் பெரும் பணக்காரர்களில் ஒருவரும், டெஸ்லா, ஸ்பேஸ் எக்ஸ் மற்றும் டிவிட்டர் ஆகிய நிறுவனங்களின் தலைவரான எலான் மஸ்க்,. சமீபத்தில் டிவிட்டரின் பெயரையும், லோகோவையும் மாற்றினார்.

டிவிட்டருக்கு போட்டியாக பேஸ்புக்கின் தாய் நிறுவனமான மெட்டாவின் பிரதம நிறைவேற்று அதிகாரி மார்க் ஜூக்கர்பெர்க் த்ரெட்ஸ் எனும் சமூக ஊடகத்தை கடந்த சில நாட்களுக்கு முன்பு தொடங்கினார்.

அப்போது டிவிட்டரை பிரதி செய்து த்ரெட்ஸ் உருவாக்கப்பட்டிருப்பதாக மஸ்க் கிண்டல் செய்ய இருவருக்கும் இடையே வார்த்தை மோதல் ஏற்பட்டது. இந்த சண்டை தீவிரமடைந்து தற்போது இருவரும் நேருக்கு நேராக நிஜமாக மோதிக் கொள்ளும் நிலைக்கு வந்துள்ளனர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 08 ஒகஸ்ட் 2023, இல. 08, ஹூணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.